**ஆகஸ்ட் – 27**

# TNPSC துளிகள்

❖ இந்தியாவில் முதல் முறையாக, திருச்சியில் உள்ள எடமலைப்பட்டிபுதூரில் உள்ள மாநகராட்சித் தொடக்கப்பள்ளி, அவசரக் காலங்களில் விரைவாக அடையாளம் காண்பதற்காக வகுப்பு மற்றும் பள்ளி முகவரி போன்ற மாணவர் விவரங்களைக் கொண்ட QR (விரைவுக் குறியீடு) குறியீடுகளுடன் கூடிய சீருடைகளை அறிமுகப் படுத்தி யுள்ளது.

❖ கஜகஸ்தானின் ஷிம்கெண்டில் நடைபெற்ற ஆசியத் துப்பாக்கி சுடுதல் சாம்பியன் ஷிப் போட்டியில் இந்தியத் துப்பாக்கி சுடும் வீரர் ஐஸ்வரி பிரதாப் சிங் தோமர் ஆடவர் 50 மீட்டர் துப்பாக்கிச் சுடுதல் 3 நிலைகள் போட்டியில் தங்கப் பதக்கம் வென்றார்.

❖ CRPF மற்றும் ITBP படைகளின் முன்னாள் தலைமை இயக்குநர் அனிஷ் தயாள் சிங் புதிய துணை தேசியப் பாதுகாப்பு ஆலோசகராக நியமிக்கப்பட்டுள்ளார்.

❖ ஆதரவற்றுக் கைவிடப்பட்ட நாய்களை மீட்பது மற்றும் பொறுப்பான செல்லப்பிராணி பராமரிப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக 2004 ஆம் ஆண்டு முதல் ஆகஸ்ட் 26 ஆம் தேதியானது சர்வதேச நாய் தினமாக அனுசரிக்கப்படுகிறது.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## சென்னை இதழியல் கல்வி நிறுவனம் திறப்பு




❖ கோட்டூர்புரத்தில் அமைக்கப்பட்டுள்ள சென்னை இதழியல் கல்வி நிறுவனத்தை 2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 25 ஆம் தேதியன்று தமிழக முதல்வர் திறந்து வைத்தார்.

❖ இந்த நிறுவனமானது சென்னையில் உள்ள அண்ணா நூற்றாண்டு நூலகத்தை ஒட்டி அமைந்துள்ளது.

❖ 2013 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் கீழ் இந்த நிறுவனத்தினை அமைப்பதற்காக அரசாங்கம் 7.75 கோடி ரூபாயை ஒதுக்கியது.

❖ இந்த நிறுவனமானது, 2025–26 ஆம் கல்வியாண்டு முதல் இதழியல் துறையில் முதுகலை பட்டயக் கல்விப் படிப்பினை வழங்க உள்ளது.

❖ தி இந்து இதழின் முன்னாள் தலைமை ஆசிரியரும் கஸ்தூரி அண்ட் சன்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் இயக்குநருமான N. ரவி அக்குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டார்.

❖ தி இந்து இதழின் முன்னாள் வாசகர் பதிப்பு ஆசிரியர் A.S. பன்னீர்செல்வன் அந்த

நிறுவனத்தின் தலைமை இயக்குநராக நியமிக்கப்பட்டார்.

## தமிழ்நாடு காவல்துறை சீர்திருத்தத் திட்டங்கள்




- இந்தியக் காவல்துறை அறக்கட்டளையானது, உள் சீர்திருத்தங்கள் மற்றும் திறன் மேம்பாட்டிற்காக தமிழ்நாடு காவல்துறையுடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது.
- இந்தத் திட்டமானது காவல்துறை-பொது மக்கள் தகவல் தொடர்பு இடைமுகம், குறை தீர்க்கும் அமைப்புகள் மற்றும் குடிமக்களுக்கு ஏற்ற காவல் நடைமுறைகளை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- பெண்கள் பாதுகாப்பு, பாதிக்கப்பட்டவர்களுக்கான உதவி மற்றும் காவல்துறைப் பணியாளர்களுக்கான சிறந்தப் பணிச் சூழல்களில் சிறப்புக் கவனம் செலுத்தப்படும்.
- இந்தச் சீர்திருத்தத் திட்டம் ஆனது ஆவடி காவல் ஆணையரகத்தின் கீழ் உள்ள பதினைந்து காவல் நிலையங்களிலும், செங்கல்பட்டு மாவட்டத்தில் பதினைந்து காவல் நிலையங்களிலும் செயல்படுத்தப்படும்.
- இந்தத் திட்ட அமலாக்க காலம் ஆனது ஓராண்டு, மேலும் மூன்றாம் தரப்பு மதிப்பீட்டின் அடிப்படையில் இத்திட்டம் தமிழ்நாடு முழுவதும் விரிவுபடுத்தப்படும்.
- பஞ்சாப், சத்தீஸ்கர் மற்றும் தெலுங்கானாவிலும் இதேபோன்ற உள் சீர்திருத்தத் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

## சிறப்பு காவல் படைப்பிரிவில் மகளிர் இடஒதுக்கீடு

- தமிழ்நாடு அரசானது, சுமார் 14 ஆண்டுகளுக்குப் பிறகு தமிழ்நாடு சிறப்பு காவல் படைப்பிரிவில் மகளிருக்கான நுழைவு மற்றும் இடஒதுக்கீட்டை மீண்டும் அறிமுகப் படுத்தியுள்ளது.
- ஆகஸ்ட் மாதம் உள்துறை அமைச்சகத்தால் வெளியிட்ட அரசு ஆணையில், ஆயுதப் படை காவல் படைப் பிரிவில் மீண்டும் சேர்க்கப்படுவதற்கு மகளிர் முழுவதும் தகுதி உடையவர்கள் என்பதை உறுதிப்படுத்தியது.
- 17 ஆண்டுகளுக்குப் பிறகு காவலர் ஆட்சேர்ப்பிற்கான ஒற்றை நுழைவு முறையையும் அரசாங்கம் மீண்டும் அறிமுகப்படுத்தியுள்ளது.

- இந்த அமைப்பானது, ஆட்சேர்ப்பு முறையில் சீரான தன்மையை உறுதி செய்வதோடு, பதவி அமர்வுகள் மற்றும் பதவி உயர்வுகளில் வயது மூப்பு தொடர்பான சிக்கல்களைத் தடுக்க உதவுகிறது.
- மகளிர் காவலர்களுக்கு ஆயுதப்படை காவல் படைப்பிரிவில் பயிற்சி வழங்கப்பட்டு, பின்னர் மாவட்ட ஆயுதப்படை சேமக் காவல் பிரிவு மற்றும் பின்னர் தாலுக்கா காவல் நிலையங்களுக்கு மாற்றப்படுவார்கள்.
- முன்னதாக, பதினைந்து படைப்பிரிவுகளில் ஒன்றான வைஷ்ணவி நகரில் உள்ள ஐந்தாவது படைப் பிரிவு மட்டுமே பிரத்தியேக மகளிர் பிரிவாக இருந்தது.
- 2011 ஆம் ஆண்டில், தமிழ்நாடு சிறப்பு காவல்துறையில் பெண்களைச் சேர்ப்பது நிறுத்தப் பட்டு, தாலுக்கா மற்றும் ஆயுதப்படை சேமக் காவல் பணிகளுக்கு மட்டுமே பெண்கள் நியமிக்கப்பட்டனர்.
- 2008 ஆம் ஆண்டில், அரசாங்கம் ஒற்றை-நுழைவு முறையை ரத்து செய்தது, இது பதவி உயர்வுகள் மற்றும் பணியமர்த்தலில் ஏற்றத்தாழ்வுகளுக்கு வழிவகுத்தது.
- தமிழ்நாடு சிறப்பு காவல்துறையின் அதிகாரிகள் மற்றும் பணியாளர்கள் மாநிலத்திற்கு உள்ளேயும், வெளியேயும் முக்கியச் சட்டம் ஒழுங்கு பணிகளுக்காக பணியமர்த்தப்படுகிறார்கள்.
- எட்டாவது படைப்பிரிவு ஆனது திகார் சிறையில் கடமைகளுக்காக டெல்லியில் பணி அமர்த்தப் பட்டுள்ளதோடு பதின்மூன்றாவது படைப்பிரிவானது தமிழ்நாடு பேரிடர் மீட்புப் படையாக செயல்படுகிறது.
- 2025 ஆம் ஆண்டு ஜனவரி 01 ஆம் தேதி நிலவரப்படி, தமிழ்நாடு காவல்துறையில் 26,589 மகளிர் பணியாளர்கள் உட்பட 1,33,961 பேர் சேர்க்கப்பட்டுள்ளனர்.


# தேசியச் செய்திகள்

## பாராளுமன்ற மழைக்காலக் கூட்டத்தொடரின் செயல்திறன்

- 2025 ஆம் ஆண்டு ஜூலை 21 முதல் ஆகஸ்ட் 21 ஆம் தேதி வரை நடைபெற்ற பாராளுமன்ற மழைக்கால கூட்டத் தொடரில், அடிக்கடி இடையூறுகளும் ஒத்தி வைப்புகளும் பதிவானது.
- மக்களவையானது அதன் திட்டமிடப்பட்ட நேரத்தில் 29 சதவீதம் மட்டுமே செயல்பட்ட அதே நேரத்தில் மாநிலங்களவை வெறும் 34 சதவீதம் மட்டுமே செயல்பட்டது.
- இது 18வது மக்களவையில் இதுவரை பதிவு செய்யப்பட்ட மிகக் குறைந்த செயல்திறன் ஆகும் என்பதோடு இதற்கு பெரும்பாலும் தொடர்ச்சியான போராட்டங்கள் மற்றும்

தடை பட்ட நடவடிக்கைகள் ஆகியவையே காரணமாகும்.

- ❖ மக்களவையில் கேள்வி நேரத்தின் 23 சதவீதம் மட்டுமே நிறைவடைந்துள்ளது என்ற நிலைமையில் மாநிலங்களவையில் வெறும் 6 சதவீதம் மட்டுமே நிறைவடைந்துள்ளது.
- ❖ கூட்டத் தொடரின் போது மாநிலங்களவையில் 12 நாட்களும், மக்களவையில் ஏழு நாட்களும் வாய்மொழி பதில்கள் எதுவும் வழங்கப்படவில்லை.
- ❖ மக்களவையில் நட்சத்திரக் குறியிட்ட கேள்விகளில் 8 சதவீதத்திற்கும், மாநிலங்களவையில் 5 சதவீதத்திற்கும் மட்டுமே அமைச்சர்கள் பதிலளித்தனர்.
- ❖ 2025 ஆம் ஆண்டு வருமான வரி மசோதா, தேர்வுக் குழுவின் அறிக்கைக்குப் பிறகு திரும்பப் பெறப்பட்டு, அதே நாளில் அதற்குப் பதிலாக புதிய மசோதா நிறைவேற்றப் பட்டது.
- ❖ சிந்தூர் நடவடிக்கை அவற்றின் மொத்த நேரத்தின் பெரும்பகுதியாக மக்களவையில் 19 மணி நேரமும், மாநிலங்களவையில் 16 மணி நேரமும் விவாதிக்கப்பட்டது.
- ❖ 18வது மக்களவை உருவாக்கப்பட்டதிலிருந்து மக்களவை அதன் துணை சபாநாயகரைத் தேர்ந்தெடுக்கவில்லை என்பதோடு மேலும் இதற்கு முந்தைய 17வது மக்களவையிலும் ஐந்து ஆண்டுகளாக துணை சபாநாயகர் தேர்ந்தெடுக்கப்பட வில்லை.




## அஞ்சல் சேவை கட்டுப்பாடுகள்

- ❖ இந்திய அஞ்சல் துறையானது, ஆகஸ்ட் 25 ஆம் தேதி முதல் அமெரிக்காவிற்கான பெரும்பாலான அஞ்சல் சேவைகளை நிறுத்தி வைத்துள்ளது.
- ❖ 800 அமெரிக்க டாலர்கள் வரை மதிப்புள்ள பொருட்களுக்கான வரி விலக்கை நீக்கும் அமெரிக்க நிர்வாக உத்தரவு எண் 14324 என்பதைப் பின்பற்றி இந்த இடை நிறுத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- ❖ 100 அமெரிக்க டாலர்கள் வரை மதிப்புள்ளப் பரிசுகளைத் தவிர, அமெரிக்காவிற்கான அனைத்து அஞ்சல் ஏற்றுமதிகளுக்கும் தற்போது சுங்க வரிகள் விதிக்கப்படும்.
- ❖ அமெரிக்கச் சுங்கம் மற்றும் எல்லைப் பாதுகாப்புப் விதிப்படி, சேவை நிறுவனங்கள் வரிகளை வசூலிக்க வேண்டும், ஆனால் தெளிவற்ற வழிகாட்டுதல்கள் விமான நிறுவனங்கள் அஞ்சல் சார்ந்த சரக்குகளை மறுக்கக் காரணமாக அமைந்தன.
- ❖ சிக்கலைத் தீர்க்கும் பணியில் ஈடுபட்டுள்ள காலத்தில் அஞ்சல் துறையானது

கடிதங்கள், ஆவணங்கள் மற்றும் விலக்கு அளிக்கப்பட்ட பரிசுகளைத் தொடர்ந்து ஏற்கும்.




# பொருளாதாரச் செய்திகள்

## 2026 ஆம் நிதியாண்டில் இந்தியாவின் வட்டி மசோதா

- இந்தியாவின் வட்டி செலுத்துதல்கள் 2026 ஆம் நிதியாண்டில் 12.76 டிரில்லியன் ரூபாயாக உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது என்பதோடு இது ஒரு தசாப்தத்திற்கு முன்பு இருந்ததை விட கிட்டத்தட்ட மூன்று மடங்கு அதிகமாகும்.
- 2016 ஆம் நிதியாண்டில் 71 டிரில்லியன் ரூபாயாக இருந்த (மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 51.5%) அரசாங்கக் கடன் ஆனது 2026 ஆம் நிதியாண்டில் 200 டிரில்லியன் ரூபாயாக (மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 56.1%) உயர்ந்தது.
- 2025 ஆம் நிதியாண்டில் பொதுக் கடன் 185.94 டிரில்லியன் ரூபாயாக இருந்தது, இதில் 157.11 டிரில்லியன் ரூபாய் உள் நாட்டு, 8.74 டிரில்லியன் ரூபாய் வெளிப்புற கடன் மற்றும் 20.09 டிரில்லியன் ரூபாய் பொதுக் கணக்குப் பொறுப்புகள் அடங்கும்.
- பெருந்தொற்றினால் ஏற்பட்ட நிதி விரிவாக்கம் காரணமாக, கடன் மற்றும் மொத்த உள்நாட்டு உற்பத்தி இடையேயான விகிதம் 2021 ஆம் நிதியாண்டில் 61.4% ஆக உயர்ந்ததோடு மேலும் அதனை 2031 ஆம் ஆண்டிற்குள் 50% ஆகக் குறைக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.
- 2021 ஆம் நிதியாண்டில் சராசரியாக 6.6% ஆக இருந்த 10 ஆண்டு கால நிறைவு காலம் கொண்ட பத்திர வருவாய் ஆனது, 2025 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் 6.4% ஆகக் குறைந்துள்ளதுடன் தற்போது இது 6.5–6.55% ஆக உள்ளது.
- நிதிப் பற்றாக்குறையானது 2025 ஆம் ஆண்டு மே மாதத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்ட இலக்கில் 0.8% ஆகக் குறைந்தது, இது ஒராண்டிற்கு முன்பு 3.1% ஆக இருந்தது என்ற நிலையில் 2025 ஆம் நிதியாண்டானது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 4.8% என்ற நிதிப் பற்றாக்குறையுடன் முடிவடைந்தது.

- கடன்களைத் திருப்பிச் செலுத்தும் அழுத்தத்தைக் குறைக்கவும், பொறுப்புகளைப் பரவலாக்கவும், மறுநிதியளிப்பு அபாயங்களை நிர்வகிக்கவும் அரசாங்கம் பத்திரங்களை வாங்குதல் மற்றும் பரிமாற்றங்களைப் பயன்படுத்துகிறது.




## பணப்புழக்க மேலாண்மைக் கட்டமைப்பு





- இந்திய ரிசர்வ் வங்கியின் உள் பணிக்குழு (IWG) ஆனது 14 நாட்கள் அளவிலான மாறுநிலை விகித ரெப்போ முறையை முக்கியப் பணப்புழக்கக் கருவியாக பயன்படுத்துவதை நிறுத்த முன்மொழிந்தது.
- சிறந்த நெகிழ்வுத்தன்மைக்காக வாராந்திர செயல்பாடுகள் மற்றும் நேர்த்தியான முறைப்படுத்தும் கருவிகளைப் பயன்படுத்த அக்குழு பரிந்துரைத்தது.
- வங்கிகளுக்கிடையிலான விகிதங்களின் மதிப்பிடப்பட்ட சராசரி விகிதம் (WACR) ஆனது செயல்பாட்டு இலக்காக இருக்கும்.
- இருப்புத் தேவைகள் மற்றும் சராசரியாக்கமானது விகித ஏற்ற இறக்கத்தை நிர்வகிக்க

உதவுகிறது, என்றாலும் வங்கிகள் அவற்றை குறைவாகப் பயன்படுத்துகின்றன.

- குறைந்தபட்ச தினசரி இருப்பு தேவைகளைக் குறைப்பது பணப்புழக்கப் பயன்பாட்டை மேம்படுத்தும் மற்றும் செலவுகளைக் குறைக்கும்.

## இந்தியாவின் மருந்துப் பொருள் ஏற்றுமதிகள்





- 2025-26 ஆம் நிதியாண்டின் முதல் காலாண்டில் இந்தியாவின் மருந்து ஏற்றுமதி 5.21 சதவீதம் உயர்ந்து 7.57 பில்லியன் டாலர்களாக இருந்தது.
- இதே காலகட்டத்தில் இறக்குமதி 4.21 சதவீதம் அதிகரித்து 786 மில்லியன் டாலர்களாக இருந்தது.
- கடந்த நிதியாண்டில், மருந்துப் பொருட்கள் ஏற்றுமதி 9.39 சதவீதம் அதிகரித்து 30.47 பில்லியன் டாலர்களாக இருந்தது, இது 2023-24 ஆம் நிதியாண்டில் 27.85 பில்லியன் டாலர்களாக இருந்தது.
- முக்கிய இறக்குமதிப் பிரிவுகளான மொத்த மருந்துகள் மற்றும் மருந்து இடைத்தரகுப் பிரிவுகள், மொத்த மருந்து இறக்குமதியில் 46 சதவீதப் பங்கினைக் கொண்டுள்ளன.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## அமெரிக்காவின் 6G ரகப் போர் விமானம்

- F-47 என்பது அமெரிக்க விமானப்படைக்கான அடுத்தத் தலைமுறை நுட்பத்திலான மேம்பட்ட போர் விமானமாகும்.
- இந்த விமானம் லாக்ஹீட் மார்ட்டின் F-22 ராப்டர் விமானத்திற்கான மாற்றாக வடிவமைக்கப் பட்டுள்ளது.
- NGAD (அடுத்த தலைமுறை நுட்பத்திலான மேம்பட்ட விமானப் படை) திட்டத்தின் கீழ் F-47 ரக விமானத்தினை உருவாக்கி உற்பத்தி செய்வதற்கான ஒப்பந்தம் போயிங் நிறுவனத்திடம் வழங்கப்பட்டது.
- NGAD அமைப்பு என்பது ஆளில்லா விமானங்கள் மற்றும் மனிதர்கள் கொண்ட போர் விமானம் உள்ளிட்ட ஒருங்கிணைக்கப்பட்ட அமைப்புகளின் குழுவாகும்.

- F-47 ஆனது எரிபொருள் மீண்டும் நிரப்ப வேண்டிய அவசியமின்றி 1,000 கடல் மைல்களுக்கு மேல் பறக்கும் திறன் கொண்டது.
- இது Mach 2 அளவினை விட அதிக வேகத்தை எட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- இதன் வடிவமைப்பில் தற்போதைய ரேடாருக்குப் புலப்படாத விமானங்கள் தர நிலைகளுக்கு அப்பாற்பட்ட ரேடாருக்குப் புலப்படாத ++ அம்சங்கள் உள்ளன.
- F-47 விமானத்தில் அதிக ஆற்றல் மற்றும் செயல்திறனுக்காக காலியம் நைட்ரைடைப் பயன்படுத்தி ரேடார் அமைப்புகள் ஒருங்கிணைக்கப்படும்.




# சுற்றுச்சூழல் செய்திகள்

## சுந்தரவனப் புலிகள் வளங்காப்பக விரிவாக்கம்

- சுந்தரவனப் புலிகள் வளங்காப்பகத்தில் கூடுதலாக 1,044.68 சதுர கிலோமீட்டர் பரப்பினைச் சேர்க்க தேசிய வனவிலங்கு வாரியம் (NBWL) ஒப்புதல் அளித்தது.
- காப்பகத்தின் மொத்தப் பரப்பளவு ஆனது தற்போது 3,629.57 சதுர கிலோமீட்டராக அதிகரித்துள்ளதுடன், இது இந்தியாவின் இரண்டாவது மிகவும் பெரிய புலிகள் வளங் காப்பகமாக மாறியுள்ளது.
- ஆந்திரப் பிரதேசத்தில் உள்ள 5,937 சதுர கிலோமீட்டர் கொண்ட நாகார்ஜுனசாகர் ஸ்ரீசைலம் புலிகள் வளங்காப்பகம் இந்தியாவின் மிகப்பெரிய வளங்காப்பகமாக உள்ளது.
- தெற்கு 24 பர்கானாஸ் மாவட்டத்தில் உள்ள மாட்லா, ராய்டிகி மற்றும் ராம்கங்கா மலைத்தொடர்கள் இந்த வளங்காப்பகப் பகுதியில் சேர்க்கப்பட்டுள்ளன.
- முதலில் நிர்ணயிக்கப்பட்ட வளங்காப்பகமானது 1,699.92 சதுர கிலோமீட்டர் பரப்பிலான மையப் பகுதியையும் 885.27 சதுர கிலோமீட்டர் இடையகப் பகுதியையும் கொண்டிருந்தது.
- 2022 ஆம் ஆண்டில், வளங்காப்பகத்திற்குள் 81 புலிகளும், தெற்கு 24 பர்கானாக்களின் சுற்றியுள்ள பகுதிகளில் 20 புலிகளும் பதிவாகின.

- இந்தியாவில் 58 புலிகள் வளங்காப்பகங்கள் உள்ளன என்பதோடு மேலும் சுந்தரவனக் காடுகள் வளங்காப்பகமானது அளவில் ஏழாவது இடத்திலிருந்து இரண்டாவது இடத்திற்கு நகர்ந்துள்ளது.
- 1973 ஆம் ஆண்டு புலிகள் வளங்காப்புத் திட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட இந்த வளங் காப்பகத்திற்குள் யுனெஸ்கோவின் உலகப் பாரம்பரியத் தளமாக அறிவிக்கப்பட்ட ஒரு தேசியப் பூங்கா அமைந்துள்ளது.




# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## அதிக இணையப் பயனர்கள் கொண்ட 10 முன்னணி நாடுகள்- 2025

| | | (in Millions) | | | (in Millions) |
|---|---|---|---|---|---|
| 1 | China | 1,110 | 11 | Philippines | 97.5 |
| 2 | India | 806 | 12 | Egypt | 96.3 |
| 3 | USA | 322 | 13 | Vietnam | 79.8 |
| 4 | Indonesia | 212 | 14 | Germany | 78.9 |
| 5 | Brazil | 183 | 15 | Bangladesh | 77.7 |
| 6 | Russia | 133 | 16 | Turkey | 77.3 |
| 7 | Pakistan | 116 | 17 | Iran | 73.2 |
| 8 | Mexico | 110 | 18 | UK | 67.8 |
| 9 | Japan | 109 | 19 | Thailand | 65.4 |
| 10 | Nigeria | 107 | 20 | France | 63.4 |


- சீனா 1.11 பில்லியன் இணையப் பயனர்களுடன் முதலிடத்தில் உள்ளது என்பதோடு இது அதன் மக்கள்தொகையில் சுமார் 78 சதவீதத்தை குறிக்கிறது.
- இந்தியா சுமார் 806 மில்லியன் பயனர்களுடன் இதில் இரண்டாவது இடத்தில் உள்ளது என்பதோடு இது அதன் மக்கள்தொகையில் 55.1 சதவீதப் பங்கினைக் குறிக்கிறது.
- அமெரிக்காவில் 95 சதவீதத்திற்கும் அதிகமாக உள்ள இணையப் பயன்பாட்டின் பரவல் விகிதத்துடன், 322 மில்லியன் இணையதளப் பயனர்களுடன் அமெரிக்கா மூன்றாவது இடத்தில் உள்ளது.
- முதல் பத்து இடங்களில் கீழ் நிலையில், மெக்சிகோ 110 மில்லியன் இணையப் பயனர்களுடன் ஒன்பதாவது இடத்தில் உள்ளது என்பதோடு இது அதன் மக்கள் தொகையில் 83 சதவீதத்திற்கும் அதிகமாக உள்ளது.

- நைஜீரியா 107 மில்லியன் பயனர்களுடன் பத்தாவது இடத்தில் உள்ளது என்பதோடு இது அதன் மக்கள்தொகையில் பாதிக்கும் மிகவும் குறைவானதாகும் என்றாலும் ஆப்பிரிக்காவின் மிகப்பெரிய இணைய சந்தைகளில் ஒன்றாகும்.
- பாகிஸ்தான் 116 மில்லியன் மற்றும் 1.11 பில்லியன் இணையதளப் பயனர்களுடன் ஏழாவது இடத்தில் உள்ளது.
- பாகிஸ்தானில் 255 மில்லியன் அளவிலான பெரிய மக்கள்தொகை இருந்தபோதிலும், இணையப் பயன்பாட்டின் பரவல் 50 சதவீதத்திற்கும் குறைவாகவே உள்ளது.

# முக்கிய தினங்கள்

## மகளிர் சமத்துவ தினம் 2025 - ஆகஸ்ட் 26

- உலகம் முழுவதும் மேற்கொள்ளப்படும் பெண்களின் உரிமைகள் மற்றும் பாலினச் சமத்துவத்திற்கான நீண்ட மற்றும் தொடர்ச்சியான போராட்டத்தை இந்தத் தினம் அங்கீகரிக்கிறது.
- 1971 ஆம் ஆண்டில் காங்கிரஸ் இந்தத் தினத்தை அதிகாரப்பூர்வமாக நியமித்த பிறகு, 1973 ஆம் ஆண்டில் முதல் மகளிர் சமத்துவ தினம் கொண்டாடப்பட்டது.
- கல்வி மற்றும் செயல்பாடு மூலம் விழிப்புணர்வை ஏற்படுத்துதல், வரலாற்றுச் சிறப்பு மிக்கச் சாதனைகளைக் கௌரவித்தல் மற்றும் பெண்களுக்கு அதிகாரம் அளித்தல் ஆகியவை இந்தத் தினத்தின் முக்கிய நோக்கமாகும்.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★